பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 2 வியாழக்கிழமை (04 - 05 - 2000) VALAMPURI ஒலி 137

★ இலங்கை அரசின் இன்றைய சூழ்நிலையில்

# இலங்கையில் இந்தியாவின் எந்த இராணுவத் தலையீடும் இருக்காது!

வெளியுறவு அமைச்சா ஜஸ்வநசிங் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கை இராணுவத்தினர் மீது கடந்த இரு வாரங்களாக விடுதலைப்புலிகள் தொடுத்துள்ள தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ள இவ் வேளையில் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர்இந்தியப் பிரதமர் வாஜ்பாயை புதுடில்லியில் சந்தித்துள்ளார்.

இச் சந்திப்பின் பின்னர் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கையும் லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்துப் பேசியுள்ளார். இப் பேச்சு வார்த்தையின்போது இலங்கை இராணுவத்தின் நிலைகுறித்து ஆராயப் பட்டதாகவும் தெரிகிறது.

ஐக்கிய இலங்கையின் கட்டமைப்புக்குள் சகல இன மக்களும் தங்கள் அபிலாசைகளை அடையும் வகையில் இந்தியா இலங்கையுடன் கலந்தாலோசித்து தேவையான மனிதாபிமான நடவடிக்கைகளை எடுக்கும்.

அதேவேளை இலங்கையில் இந்தியாவின் இராணுவத் தலையீடு ஒரு போதும் இருக்க மாட்டாது.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஐஸ்வந்சிங் இலங்கையின் தற்போதைய நிலை குறித்து மேற் கண்டவாறு செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியப்பிரதமர் அடல்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலிப் பகுதி மோதலில் உயிரிழந்த 14 படையினரின் சடலங்கள் ஒப்படைப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் கிளாலிப் பகுதியில் நடைபெற்ற மோதலின் போது கொல்லப்பட்ட 14 படையினரின் சடலங்களை விடுதலைப்புலிகள் நேற்று ஐ.சி.ஆர்.சியிடம் ஒப்படைத்துள்ளனர் என்று பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை 42 படையினரின் சடலங்களை அக்கராயனில் வைத்து புலிகளால் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(வ-4)

## யுத்தம் தொடருமாயின் இலங்கை தனிமைப்படும்!

(கொழும்பு)

அரசாங்கம் விரைவில் யுத்தத்திற்கு முடிவு காணாவிட்டால் இலங்கை சர்வதேச சமூகத்திலிருந்து தனிமைப் படுத்தப்பட்டுவிடும்.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள கடந்த வருட பொருளாதார அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## 23 லொறிகளில் வன்னிக்கு உணவுப் பொருட்கள்

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்கு 23 லொறிகளில் உணவுபபொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக்கு 10 லொறிகளிலும், முல்லைத்தீவிற்கு 10 லொறிகளிலும், மன்னார் மாவட்டத்திற்கு மூன்று

[8 ஆம் பக்கம் பார்க்க]

## ★ யாழின் இன்றைய நிலை குறித்து வாஜ்பாய், உயர் அமைச்சர்கள் ஆகியோருடன் கதிர்காமர் பேச்சு

(புதுடில்லி)

யாழ். குடாநாட்டின் தற்போது உள்ள நிலை தொடர்பாக இந்திய பிரதமர் வாஜ்பாயை இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பின் போது இந்திய பிரதமர் வாஜ்பாயுடன்

(8ஆம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பு அறவே இல்லை

செயலக அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தீவிரமடைந்துவரும் யுத்தத்தைத் தொடர்ந்து குடாநாட்டில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கு எந்தவிதமான வாய்ப்புகளும் இல்லை என்று புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

உணவுப் பொருட்களின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் சமரசத்தை எதிர்ப்போர் விரைவில் அவசியத்தை உணர்வர்

(கொழும்பு)

ஆனையிறவுப் படைத் தளத்தை இழந்தது பின்னடைவு தான். ஆனால் புலிகளுக்கு எதிரான யுத்தம் தொடரும். புலிகளின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கப்படும். இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற செயற்குழுக் கூட்டம் நேற்று அலரிமாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற போது அதில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதிஇவ்வாறு தெரிவித்தார்.

[8ஆம் பக்கம் பார்க்க]

## பிரிகேடியர் கிறான் அளுத்கம மன்னார்த் தளபதியாக நியமனம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திற்கென தனியாக புதிய இராணுவத் தளபதியாக பிரிகேடியர் கிறான் அளுக்கம நியமிக்கப்பட்டுள்ளதாக இராணுவ நடவடிக்கை தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது.

இது வரை வவுனியா மன்னார் மாவட்டங்களிற்கு ஒரு

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியைத் தக்கவைக்க படையினர் பகீரதப்பிரயத்தனம்!

புலிகளின் தாக்குதல் உத்வேகம்

ஆனையிறவு, பளைப் படைத்தளங்களைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் கிளாலி வரை முன்னேறி அங்குள்ள இராணுவ கடற்படைத் தளத்தைக் கைப்பற்றுவதற்கான கடும் சண்டையில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அப்பகுதியில் படையினருக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் பீரங்கிப் படைத் தளபதி கேணல் பானு உயிரிழக்கவில்லை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிட்டுபீரங்கிப் படையணித் தளபதியான கேணல் பானு உயிரிழக்கவில்லை என எமது கொழும்புச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மேதின நிகழ்வுகள்

வன்னிப் பெருநிலப்பரப்பில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மேதின நிகழ்வுகள் நடந்துள்ள

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் செய்த தவறை ஒருபோதும் வாஜ்பாய் செய்யமாட்டார்

காங்கிரஸ்ஆட்சியில் ராஜீவ் காந்தி செய்த தவறை வாஜ்பாய் ஒரு போதும் செய்ய மாட்டார். இந்திய இராணுவம் இலங்கைக்கு மீண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 'தனித்தமிழ்நாடு பற்றி இந்திய எம்.பி. ஒருவர் கருத்து வெளியிடலாமா?

## வெகுண்டெழுகிறார் மணிசங்கர்ஐயர்

'இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்க குறித்து ஜெனிவாவில் மறுமலர்ச்சிதிராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி தெரிவித்த கருத்துக்கள் தொடர்பான உண்மை நிலையைத் தெளிவுபடுத்துமாறு இந்திய எதிர்க்கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சி இந்திய அரசைக் கோரியுள்ளது.

இந்திய பாராளுமன்றக் கீழ் சபையில் தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்திராகாங்கிரஸ் எம்.பி. யான மணிசங்கர் ஐயர் இக்கோரிக்கையை விடுத்தார்.

வை.கோவின் கூற்றானது ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக இருப்பதால் அவர் மீது ஏதாவது தீர்மானம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி பிரதமர் வாஜ்பாய் ஒரு அறிக்கை வெளியிட வேண்டும்என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

தனித் தமிழ் நாடு குறித்து ஆளுங்கூட்டணியில் அங்கம் வகிக்கும் எம்.பி. ஒருவர் எவ்வாறு கருத்துத் தெரிவிக்க முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## 1 லட்சத்து 30 ஆயிரம் லீற்றர் பெற்றோல் காங்கேசன் வந்தது

### இன்று விநியோகிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதன் பொருட்டு 650 பரல்களில் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் லீற்றர் பெற்றோல் கொண்டுவரப்பட்டுள்ளது.

சில்க்ருட் என்ற கப்பல் இப் பெற்றோலுடன் கடந்தசெவ்வாய்க்கிழமை காங்கேசன் துறைக்குவந்தடைந்தது.

இப் பெற்றோல் நேற்று புதன்கிழமை இறக்கப்படவிருந்தது.

இன்றுவியாழக்கிழமை எரிபொருள் நிலையங்களுக்கு இது விநியோகிக்கப்படுமெனவும் இதன் மூலம் குடாநாட்டில் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு என்ற பேச்சே எழ இடமில்லாது போய்விடும் என்றும் பெற்றோலியக் கூட்டுத் தாபனவட்டாரங்கள் நேற்று வலம்புரிக்குத் தெரிவித்தன.

பெற்றோல் கூட்டுத்தாபனத்தால் ஒழுங்காக விநியோகிக்கப்படும். யுத்த நிலையைக் காரணம் காட்டிசில பதுக்கல் பெருச்சாளிகள் கறுப்புச் சந்தை மூலம் விலைகூட்டி பெற்றோலைக் சமீப நாட்களாக விற்று ஏப்பமிட்டு வந்ததும் இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது. (சி)

## புலிகளைத் தனிமைப்படுத்தும் முயற்சிகள் யாவுமேதோல்வி

### மு. கா. துணைத்தலைவர் பேச்சு

(மட்டக்களப்பு)

''தமிழ் மக்களிடமிருந்து புலிகளைத் தனிமை படுத்த எடுத்த தந்திரோபாயங்கள் எல்லாம் தோல்வியடைந்து விட்டன'' என்று முஸ்லிம் காங்கிரஸின் மூத்த துணைத் தலைவர் மருதூர்கனி கிண்ணியாவில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் சிறப்புரையாற்றுகையில் கூறினார்.

''புலிகளைப் பலவீனப் படுத்திவிட்டு அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைக்கலாம் என்ற எண்ணத்தை அரசிடம் எதிர்க்கட்சியும் கைகழுவி விட்டு, துரிதகதியில் அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்றும் ''1994 இல் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி சந்திரிகா அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டார். ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள்ளேயும் வெளியேயும் இருந்த பேரினவாதசக்திகளின் அழுத்தங்களால் அந்த முயற்சிகள் அமுங்கிப் போயின'' என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார். (சி)


## மூன்றாம் ஆண்டு நினைவு நாள்

திருமதி

**லில்லி தவமணி நல்லதம்பி**



மண்ணில் 1933-01-30 மகிமைக்குள் 1997-05-04

ஆண்டு மூன்று ஆனதுவோ
அம்மா என்ற சொல்லை நாம் மறந்து
ஆண்டு மூன்று ஆனதுவோ
உங்கள் அறுசுவை உணவை நாம் உண்டு
ஆண்டு மூன்று ஆனதுவோ
உங்கள் அழகு முகம் நாம் கண்டு
ஆண்டு மூன்றென்ன மூவாயிரம்
சென்றாலும் உங்கள் முகத்தை மறப்பமோ
உங்கள் ஆத்ம சாந்திக்காகத்
தினமும் ஜெபிக்கிறோம்.

கணவன், பிள்ளைகள்
மருமக்கள் - பேர்த்தி
சகோதரர் - சகோதரி

(398)


## யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் இன்றும் விமான ரிக்கட் பண மீளளிப்பு நிகழுமென அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு செல்வதற்கு விமான ரிக்கெட் எடுத்தவர்கள் இன்று வியாழக்கிழமை காலையும் யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்திற்கு தாம் பெற்ற ரிக்கெட்டுகளுடன்ரிக்கெட்மீளளிப்பு பணத்தைப் பெற்றுக் கொள்ளசமுகமளிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

இவ்விதம் நேற்று புதன் கிழமையும் மேற்படி காரியாலயத்தில் ரிக்கெட்டுக்கான பணமீளளிப்பு நடைபெற்றது குறிப்பித்தக்கது. (சி)

## சங்கானைப் பகுதியில் வேகமாக பரவும் நெருப்புக் காய்ச்சல்

(சங்கானை)

சங்கானைப் பகுதியில் நெருப்புக் காய்ச்சலுக்கு உட்படுவோர் தொகை வெகு வேகமாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சங்கானை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் கடந்த மூன்று மாதத்துள் ஐந்நூற்றிற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றிருப்பதாகவும், 87 நோயாளர்கள் வைத்தியசாலையில்தங்கி சிகிச்சை பெற்றிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நெருப்புக் காய்ச்சல் பரவுவதற்கு பிரதானமான காரணம் அசுத்தமான நீரைப் பருகுவதேயாகும் என சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (க)

## கொக்குவில் பகுதியில் திருடர் தொல்லை

# வீட்டார் உறங்குகையில் ஓடு பிரித்து தங்கநகை, பணம், பொருள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வீட்டார் உறங்கிக் கொண்டிருக்கையில் ஓட்டைப் பிரித்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்து பெறுமதி வாய்ந்த பொருட்களைச் சாதுரியமாகத் திருடிச் சென்றுள்ளனர்.

கொக்குவில் கிழக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இரு வீடுகளில் இத்தகைய திருட்டுக்கள் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பரியோவான் கல்லூரி ஆசிரியர் ராகவாச்சாரி என்பவரது வீட்டிலும் என். விஜயரத்தினம் என்பவரது வீட்டிலுமே இத் திருட்டுக்கள் நிகழ்ந்துள்ளன.

தங்க நகைகள், மின்சார உபகரணங்கள், ரொக்கப் பணம், உடுபுடவைகள் என்பன திருடப்பட்டுள்ளன.

இப் பகுதிகளில் சமீப காலமாக திருடர் தொல்லை அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## பற்றுச் சீட்டு இல்லை

இலங்கை மின்சார சபையின் மின்பாவனையாளர்களுக்கான மின் கட்டணப் பற்றுச்சீட்டுக்கள் கடந்த மூன்று மாதங்களாக வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பற்றுச்சீட்டுகள் வழமையாகக் கொழும்பிலிருந்தே அனுப்பப்படுவதாக சபை வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. [சி-77]

## தீவகத்திற்குச் செல்லும் பஸ்களிலும் படையினர் தீவிர சோதனை

(மண்கும்பான்)

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திலிருந்து தீவகம் நோக்கி அரசபேருந்து மற்றும் தனியார் மினி பஸ்களில் பயணம் செய்வோர் படையினரால் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சோதனை நடவடிக்கையின் போது ஆண்கள் பெண்கள், சிறுவர்கள் அனைவரும்பஸ்சிலிருந்து இறக்கப்பட்டு சோதனையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் பண்ணைப் பாலத்திற்கு சற்றுமுன்பாக இச்சோதனை நடவடிக்கை இடம் பெற்றது. (க-83)

## ஆட்களற்ற வீடுகள் காணிகளில் இடம்பெயர்ந்தோர் தங்கல்

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி, எழுதுமட்டுவாள், உசன், மிருசுவில் போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்கள் சாவகச்சேரி பகுதியிலுள்ள கல்வயல், மட்டுவில், சரசாலை போன்ற இடங்களில் தற்போது தங்கியுள்ளன.

இப்பகுதிகளில் இருக்கும் ஆட்களற்ற காணிகளில், வீடுகள் இப்போது இக்குடும்பங்கள் தங்கிஇருக்கின்றன.

இவர்களது பதிவுகளை அவ்வப்பகுதி கிராம சேவகர்கள் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் இக் குடும்பங்களுக்கான நிவாரணங்கள் விரைவில் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி-77)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 03 ஆம் திகதி வரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

**சங்கானை**

| | |
|---|---|
| 138521 ஏ | 139649 ஏ |
| 142150 ஏ | |

**யாழ்ப்பாணம்**

141117 ஏ

**கோப்பாய்**

| | |
|---|---|
| 128151 ஏ | 128151 பி |
| 134345 ஏ | 134345 பி |
| 136576 ஏ | 136581 ஏ |
| 136581 பி | 136581 சி |
| 136654 ஏ | 136654 பி |
| 136664 ஏ | 136664 பி |
| 136668 ஏ | 136670 ஏ |
| 136670 பி | 136670 சி |
| 136672 ஏ | 136672 பி |
| 136672 சி | 136697 ஏ |
| 136697 பி | 143217 ஏ |
| 143221 ஏ | 143272 ஏ |
| 143272 பி | 143277 ஏ |
| 143277 பி | 143321 ஏ |
| 143401 ஏ | 143402 ஏ |
| 143415 ஏ | 143418 ஏ |
| 143419 ஏ | 143419 பி |
| 143421 ஏ | 143449 ஏ |
| 143454 ஏ | 14345 6 ஏ |
| 143457 ஏ | 143460 ஏ |
| 143461 ஏ | 143473 ஏ |

**நல்லூர்**

| | |
|---|---|
| 139433 ஏ | 139433 பி |
| 139433 சி | 139433 டி |
| 139906 ஏ | 141021 ஏ |
| 141118 ஏ | 141118 பி |
| 143182 ஏ | 143182 பி |
| 143261 ஏ | 143261 பி |
| 143273 ஏ | 141186 ஏ |
| 141186 பி | 142054 ஏ |
| 142054 பி | 147433 ஏ |
| 147434 ஏ | |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 141250 ஏ | 141250 பி |
| 141250 சி | 141250 டி |
| 141250 ஈ | 141250 எவ் |
| 141834 ஏ | |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 141761 ஏ | 141886 ஏ |
| 141886 பி | 141886 சி |
| 141937 ஏ | 147035 ஏ |

**உடுவில்**

| | |
|---|---|
| 136341 ஏ | 136341 பி |
| 136700 ஏ | 136700 பி |
| 139911 ஏ | 139911 பி |
| 139911 சி | 143225 ஏ |
| 143225 பி | 143246 ஏ |
| 143263 ஏ | 143263 பி |
| 139714 ஏ | 141956 ஏ |
| 142016 ஏ | 147019 ஏ |

(சு)

## பிரதேச செயலகத்திலும் பெறலாம்

(கல்வியங்காடு)

யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிரதேச செயலகங்களிலும் கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவங்களைப் பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரிகள் உரிய கட்டணம் செலுத்தி இதனைப் பெறலாம் என்று குறிப்பிட்ட அளவுப் படிவங்களே வந்துள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது. (சி-54)

# இலவச சீருடை விநியோகம்

# திடீர் பரிசோதனை நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு இவ்வாண்டு வழங்கப்பட்ட இலவச சீருடைகள் முறையாக வழங்கப்பட்டுள்ளனவா என்பதனைக் கண்டறிய நாடு முழுவதும் கோட்ட மட்டத்தில் திடீர் பரிசோதனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கல்வி உயர்கல்வி அமைச்சின் மேலதிகச்செயலாளர் எஸ் தில்லை நடராஜா நாட்டிலுள்ள சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

### ஐவர் குழு

கோட்டக் கல்வி அதிகாரிகள் தலைமையில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட இத் திடீர் பரிசோதனைக் குழுக்கள் பாடசாலைக்கு நேரடியாகச் சென்று மாணவர் வரவு இடாப்பு இலவச சீருடை விநியோகம் என்பன தொடர்பான ஆவணங்களைப் பார்வையிடும்.

### முறைப்பாடு

பாடசாலைகளில் இலவச சீருடை விநியோகம் தொடர்பான ஒழுங்கீனங்கள் கடந்த காலங்களில் இடம் பெற்றுள்ளதாகவும் பாடசாலைக்குச் சமுகமளிக்காது நீண்ட காலம் லீவில் இருக்கும் மாணவர்களின் பெயர்களில் இலவச சீருடைகள் பெறப்பட்டிருப்பதாகவும் அமைச்சுக்குத் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்ததனையடுத்தே இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது என்றும் அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சி)

### 1 கோடி 25 லட்சம் பெறுமதியான

## குண்டு துளைக்காத வாகனம் வேண்டாம் என்கிறார் ரணில்

(கொழும்பு)

எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் தனக்கு வழங்கப்படவுள்ள 1 கோடி 25 இலட்சம் ரூபா பெறுமதிமிக்க குண்டு துளைக்காத வாகனத்தைப் பெற்றுக்கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களுக்குள்ளாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் 20 எம் பிக்களுக்கு அரசாங்கம் இவ் வாகனங்களைப் பெற்றுக் கொடுக்கத் தீர்மானித்துள்ளது.

நாட்டின் இன்றைய நெருக்கடியான நிலைமையினைக் கருத்திற் கொண்டு இவ்வளவு பெரும் தொகை பெறுமதியுடைய வாகனம் தனக்கு அவசியமில்லை என அவர் கூறியுள்ளார். (சி)

## சமாதானம் ஜனாதிபதி மூலம் ஏற்படுத்தப்படுவது திண்ணம்

### யாழ் சு. க. பிரதியமைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

'மே தினம் தொழிலாளர்க்கான உரிமைக்குரிய வித்தை இட்டது. போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்றார் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தன ஆனால் எமது ஜனாதிபதியோ சமாதானத்தை நோக்கியயுத்தம் என தற்போலதய நிலைபற்றிச் செல்வதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.'

இவ்வாறு கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மே தின விழாவில் யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதி அமைப்பாளர் க. தேவகுலநாயகம் கூறினார் 'ஜனாதிபதி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவார்' என்றும் அவர் சொன்னார்.

மேற்படி கட்சிப் பணிமனையில் இவ் விழா நடைபெற்றது. (சி)

## ஏழாலை சுழிபுரம் பகுதியில் மூன்று இளைஞர்கள் படையினரால் கைது

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஏழாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏழாலை வடக்கைச் சேர்ந்த சிவநாயகமூர்த்தி உதயசங்கர் (வயது-21) கடந்த [illegible] திகதியும், தொல்புரம் மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி ஜீவநேசன் (வயது-25) அதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா துஷ்யந்தன் (வயது 19) கடந்த 25 ஆம் திகதியும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

இவர்களது கைது குறித்து படையினரால் ரசீது வழங்கப்பட்டதா என்பது குறித்த தகவல் எதுவும் இல்லை [illegible]-03

### மட்டு. காந்தி சிலையருகில்

## வேலையற்ற பட்டதாரிகள் கவன ஈர்ப்புப் போராட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றிணைந்து மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள காந்தி சிலைக்கருகில் நேற்று கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்றினை நடாத்தியுள்ளனர்.

நூற்றுக்கணக்கான வேலையற்ற பட்டதாரிகள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு தமக்கு அரசபணி வழங்குவது தொடர்பான அவசியத்தை வலியுறுத்தினார்.

இதேவேளை,

மட்டக்களப்பு மாவட்டத்தில் 600 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலையற்று இருப்பதாக தெரியவருகிறது. (உ-சி)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலக முதலாவது நடமாடும் சேவை இன்று

(மனிப்பாய்)

வலி.தென் மேற்குபிரதேச செயலக முதலாவது நடமாடும் சேவை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தலைமையில் இன்று 4 ஆம் திகதி இடம் பெறும்.

ஜே/129 சுதுமலை வடக்கு ஜே/130 சுதுமலை தெற்கு ஜே/131 சாவற்கட்டு, ஜே/132 உயரப்புலம் ஜே/133 ஆனைகோட்டை ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இச்சேவை மூலம் பயன்பெற உள்ளனர். [க-120]

## 'இராணுவ ஆய்வாளர்கள் கருத்து' கொழும்பு நாளிதழ் தரும் தகவல்

(கொழும்பு)

'ஆனையிறவில் தாம் கைப்பற்றிய ஆயுதங்களை மாத்திரம் வைத்துக் கொண்டே புலிகளால் யாழ். குடாநாட்டின் மீது பாரிய தாக்குதலைத் தொடுக்க முடியும் என இராணுவ ஆய்வாளர்கள் கூறியுள்ளதாகக் கொழும்பு நாளிதழ் ஒன்று கடந்த திங்கட்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகள் கைப்பற்றிய சில முக்கிய ஆயுதங்களும் அதன் சக்தியும் என்ற விவரத்தையும் இவ்விதழ் கூறியுள்ளது.

இவற்றைவிட புலிகள் வசம் பெருந் தொகை ஆயுதங்கள் இருப்பதாலும் குடா நாட்டின் மீதான தாக்குதலை புலிகள் இலகுவாக்குவார்கள் என்றும் மேற்படி ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி இச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (சி)

## இருபாலை வாசிக்கு பொல்லடி தொழில்போட்டி காரணமா?

[யாழ்ப்பாணம்]

இரவு வேளை வீடொன்றுக்கு வந்த சிலர் வீட்டுக்காரருடன் சிங்களத்தில் கதைத்து விசாரணைக்கு வருமாறு கேட்டபோது அவர் அடையாள அட்டையை எடுத்து வருவதாகக் கூறினாராம்.

அப்போது சரமாரியாக அவருக்குப் பொல்லடி தலையில் விழுந்ததாம்.

படுகாயமடைந்த நிலையில் அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு விரையப்பட்டார்.

இருபாலை பழம் றோட்டில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

லாண்ட்மாஸ்டர் வாடகைக்கு விடுபவரான செல்லத்துரை பூபால சிங்கம் என்பவரே தாக்குதலுக்குள்ளானவராவார்.

தொழிற் போட்டியே இச் சம்பவம் நடந்துள்ளதற்குக் காரணம் எனக்கூறப்படுகிறது. [105.சி]

## வரணி மகாவித்தியாலயம் மீண்டும் செயலற்ற நிலையில்

(வரணி)

வரணி மகாவித்தியாலயத்தில் படையினர் தங்கியிருந்ததால் வித்தியாலயம் இயங்க முடியாத நிலை இருந்து வந்தது.

இப்போது அவர்கள் அகன்று இடம் பெயர்ந்த மக்கள் அங்கு வந்து தங்கியிருந்ததால் இயங்க முடியாது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான வித்தியாலயம் இது எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி-28)

## ஆட்களற்ற வீடுகளில் சுபளீகரம் வானமே கூரையாகின்றது

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் ஆட்கள் இல்லாத வீடுகளிலுள்ள ஓடுகள், மற்றும் அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளை இனந்தெரியாத திருடர்கள் மாலை வேளைகளில் திருடிவருவதாக முறையிடப்படுகிறது.

இவ்விதம் திருடப்படும் பொருட்களைத் தூரஇடங்களுக்கு அவர்கள் எடுத்துச் சென்று குறைந்த விலையில் விற்பனை செய்வதாகவும் தெரியவந்துள்ளது.

இப்பகுதிகளிலுள்ள அநேக வீடுகள் தற்போது கூரைகள் இன்றியே காட்சியளிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. [சி-77]

## வடமராட்சிப் பகுதியில் மீண்டும் இராணுவ முகாம்

(புலோலி)

வடமராட்சி கிழக்கு அம்பன் கமநலசேவை நிலையக் கட்டடம், பருத்தித்துறை பிரதேச சபை, குடத்தனை உப அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை அண்டிய பகுதியில் மீண்டும் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

கமநல சேவை நிலையத்தில் இயங்கி வரும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைப் பொருட்களும், குடத்தனை உப அலுவலகப் பொருட்களும் ஏற்றப்பட்டு நேற்று பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதே வேளை அம்பன், மணற்காட்டு பகுதிகளில் இருந்து பருத்தித்துறைக்கு மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர். (சு-52)

## பூவரசங்குளத்தில் கிளைமோர்த் தாக்குதல் ஆறு படையினர் காயம்

(வவுனியா)

வவுனியா பூவரசங்குளத்துக்கு வடக்கே புலிகள் நடத்திய கிளைமோர்க் கண்ணி வெடித்தாக்குதலில் 6 படையினர் காயமடைந்துள்ளனர்.

படையினர் சென்ற 'ட்ரக்' வண்டியே இந்தக் கண்ணி வெடித் தாக்குதலுக்கு இலக்கானதாக பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. (வ-4)

## குடத்தனையில் மருதங்கேணி உ. அ. அதிபர் பணிமனை

(மந்திகை)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை குடத்தனையில் இயங்குமென அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்கள் தற்போது அம்பன் குடத்தனை மணல்காட்டுப்பகுதியில் தங்கியுள்ளமையால் அவர்களின் வசதிகருதி நிவாரண பணிகளை இலகு படுத்தவும் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[illegible] பகுதியில் இதன் தலைமை அலுவலகம் இயங்க உப அலுவலகமாக இது செயற்படும்.

இதற்கு முன்பு அம்பன் கமநல சேவைத் திணைக்களத்திலிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி-23)

## வீதியோரங்களில் பச்சிளம் பாலகர்களுடன் மக்கள் பரிதவிப்பு

[வரணி]

பச்சிலைப்பள்ளி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்து இடம்பெயந்து வந்த மக்கள் வீதிகளிலும் பொது இடங்களாகிய சனசமூக நிலையங்கள் பாடசாலை, கோயில்கள் போன்ற இடங்களில் தற்காலிகமாக தங்கியுள்ளனர்.

இவர்களின் அன்றாடப் பிரச்சினை வேதனைதருகிறது என்றும் பச்சிளம் பாலகர்களுடன் தவிக்கும் இவர்கள் நிலை பரிதாபகரமானது, என்றும் தெரிக்கப்படுகிறது. (சி-28)

## பற்றாதநிதிஉதவி

[தொன்மராட்சி]

சமூக சேவைகள் திணைக்களத்தினால் வறியவர்களுக்கும் உடல்ஊனமுற்றவர்களுட்கும் மாதாந்தம் தபால் அலுவலங்கள் மூலம் வழங்கப்படும் பொதுஜனஉதவிப்பணமாகிய நூறு ரூபாவைப் பெறுபவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இந்த உதவிப்பணத்தினை பெறுகின்றவர்கள் குறித்த 100 ரூபாவை மட்டும் கொண்டு தம் வாழ்வை எப்படிக் கொண்டு செல்வது என அங்கலாய்க்கின்றனர்.

தமக்கு வழங்கப்படும் உதவித்தொகை அதிகரித்துத் தரவேண்டும் என இவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர். [77-சி]

## கணனிப் பயிற்சிநெறி

[தொன்மராட்சி]

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் 8 மாத கணனிப் பயிற்சிநெறி ஒன்று நடாத்தப்படவுள்ளதாக கல்லூரியின் அதிபர் திரு. க. சந்திரசேகரா தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் இப்போது கோரப்பட்டுள்ளன. [77-சி]

## 20 இலட்சம் கால்நடைகள் இறப்பு மங்கோலியாவில் குளிரின் தாக்கம்

[மங்கோலியா]

மங்கோலியநாடு கடந்த 30 ஆண்டு காலத்தில் இப்பொழுது கடும் பனித்தாக்கத்தைச் சந்தித்திருக்கிறது.

இற்றை வரை 20 இலட்சம் ஆடு, மாடுகள் இக்குளிரில் இறந்துள்ளனவென்றும் இந்த எண்ணிக்கை இந்த மாத இறுதியில் 50 இலட்சமாக உயரக்கூடும் எனவும் அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்க அறிக்கையொன்று தெரிவிக்கிறது. (து)

## சியாரா லியோனில் உள்நாட்டு யுத்தம் முடிவு அமைதிப்படை விலகல்

சியாராலியோனில் நிலைகொண்டிருந்த நைஜீரியா தலைமையிலான அமைதிப்படை அங்கிருந்து முற்றாக வெளியேறியுள்ளதென அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சியாராலியோனில் சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் பணியாற்றிய நைஜீரியா தலைமையிலான மேற்காபிரிக்கப்படைகள் மீண்டும் ஜனாதிபதியவர்களிடம் தனது பணிகளை முடித்துக்கொண்டு அங்கிருந்து முற்றாக வெளியேறியிருப்பதாகத்தெரியவருகிறது. (உ)

பிலிப்பைன்ஸ்

## அரசபடை தீவிரவாதிகள் மோதல் பணயக்கைதிகள் இருவர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸின் தீவு ஒன்றில்முஸ்லிம்தீவிரவாதிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த வெளி நாட்டவர்கள் உட்பட்ட 20 பணயக்கைதிகளில் இருவர் கொலை செய்யப்பட்டிருப்பதாக பிலிப்பைன்ஸின் உள்ளூர் தொலைக்காட்சிநிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

மலேசியாவின் உல்லாசப் பயணிகள் தீவொன்றிலிருந்து கடந்த மாதம் கடத்தப்பட்ட 20 பேர் முஸ்லிம் தீவிரவாதிகளால் பிலிப்பைன்ஸில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை தெரிந்ததே.

இவர்களை மீட்கும் பணிக்கென பிலிப்பைன்ஸ் அரசினால் நியமிக்கப்பட்டிருந்த இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே மூண்ட சண்டையிலேயே இருவரும் இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

எனினும் இது குறித்துஉண்மைத் தகவல்களை வெளியிட பிலிப்பைன்ஸ் இராணுவத்தினர் மறுத்து வருகின்றனர்.

இதேசமயம்,

மேற்படி பணயக்கைதிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நடவடிக்கைகளை தடுக்க வேண்டும் என மேற்குலக நாடுகள் பலவும் பிலிப்பைன்ஸ் அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## பத்திரிகைச் சுதந்திரத்துக்குப்பங்கம் ஈரான் நாடு முன்னணியில்

(லண்டன்)

பத்திரிகைச் சுதந்திரத்துக்கு பங்கம் விளைவிக்கின்ற நாடுகள் தொடர்பான இவ்வருடத்திற்கான புள்ளிவிபர பட்டியலினை பொது நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளது.

அதில், பத்திரிகைப் பணியில் ஈடுபடுபவர்கள் அதிக பிரச்சினைகளை எதிர்நோக்கும் நாடுகளில் ஈரான் முதலிடம் வகிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகம் முழுவதிலும் உள்ள பத்திரிகைச் சுதந்திரத்தினை மிக மோசமாக மீறுகின்ற நாடுகளென சுட்டிக்காட்டப்பட்டுள்ள 10 நாடுகளில் ஈரான், பாகிஸ்தான், யூகோஸ்லாவாக்கியா போன்றவை முன்னணியிலுள்ளன.

இவ்வருட பட்டியலில், பத்திரிகைச் சுதந்திரத்தை மிக மோசமாக மீறியவர்கள் என்ற வகையில் சீன லியோவின் முன்னாள் கிளர்ச்சித் தலைவர் போதி சாங்கோ, ஈரானிய அய்துல்லா கொமெய்னி, யூகோஸ்லாவிய ஜனாதிபதி ஸ்ரோபோடன் மிலாசிரிப் ஆகியோர்முறையே முதல் மூன்று இடங்களை வகிக்கின்றனர்.

அத்துடன் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு மதிப்பளிக்காத நாடுகள் பட்டியலில் ஆசிய நாடுகள் பல வற்றின் பெயர்களும் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (உ)

## வியட்நாமுடன் கருத்து முரண்பாடு உதவிகளை நிறுத்த கனடா முடிவு

(ஒட்டாவா)

வியட்நாமுடனான அமைச்சு மட்டத் தொடர்புகள் அனைத்தையும்நிறுத்தப் போவதாக கனடா அரசு அறிவித்துள்ளது.

போதைமருந்து கடத்தல் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட கனேடிய பெண் ஒருவருக்கு கடந்த வாரம் வியட்நாம் அரசு மரணதண்டனை விதித்திருந்தது.

இதுதொடர்பான விளக்கங்களை கனடாஅரசு கோரிய போதும் வியட்நாமிடம் இருந்து ஏதொரு பதிலும் கிடைக்கவில்லை.

இதனையடுத்து இருநாடுகளுக்குமிடையே எழுந்துள்ள அதிருப்தியின் வெளிப்பாடாக மேற்படி அறிவிப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் இம்முடிவினால், வியட்நாம் அரசு கனடாவிடமிருந்து வருடாந்தம் பெற்றுவந்த ஒருகோடி10 இலட்சம் டொலர் நிதியுதவியினை இழக்கநேர்ந்திருப்பதாக தெரியவருகிறது. [உ]

### சுகாதாரம் பேணும் செலூலர்

செலூலர் தொலைபேசிகள் பாவிப்பவர்களுக்கு காய்ச்சல் சளிச்சுரம் போன்ற நோய்கள் பரவுகின்றன என்று முன்பு ஐரோப்பிய நாடுகளில்செய்திகள் பரவின.

இன்று செலூலர்மூலமாகப் புதிய அறிவித்தல் விடப்பட்டிருக்கிறது.

விஞ்ஞான ரீதியான பல ஆய்வுகளின்படி செலூலர்மூலமாக எவ்விதநோய்களும் பரவுவதற்கு இடமில்லையென்று செலூலர் மூலமாக செய்திகளை அறிவிக்கின்றார்கள்.

## சென்னை விமான நிலைய தகர்ப்பில் ஆயுள் தண்டனை பெற்றோர் விடுதலை

(சென்னை)

பரபரப்பான சென்னை விமானநிலையகுண்டுவெடிப்பில் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு சிறையிலிருந்த ஐவரும் நேற்று முன்தினம் நீதிமன்றில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

1984 ஆகஸ்ட் இரண்டாம் திகதி சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அநாதரவாகக் கிடந்த இரண்டு சூட்கேசுகள் வெடித்ததில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பலத்த சேதங்கள் ஏற்பட்டன.

இது தொடர்பாக விமானப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஒருவர் காவலில் ஈடுபட்ட சந்திரகுமார், விஜயகுமார் மேகநாதன் என்ற எயர் லங்கா ஊழியர் மற்றும் பலர் மீதும் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கில் மேற் குறிப்பிட்ட ஐவருக்கும் நீதிமன்றம் அவ்வேளை ஆயுள் தண்டனை விதித்தது.

இந்த ஐவரும் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்தனர் இப்பொழுது வழக்கு விசாரணையின் முடிவில் இவர்களுக்கும் குண்டு வெடிப்புக்கு எவ்வித தொடர்பும் இல்லையென்று உச்ச நீதிமன்றம் விடுதலை செய்யுமாறு தீர்ப்பளித்தது. என்று செய்திகள் கூறுகின்றன. (து)

## மனிதனும் சுவாசிக்கட்டும் ஆஸ்மாதின இவ்வாண்டு நோக்கு

(புதுடில்லி)

நேற்று உலக ஆஸ்மா தினம் குணப்படுத்த முடியாத இந்த நோயை திறம்பட கட்டுப்படுத்துவதற்குரிய அவசியத்தை உணர்த்துவதற்காக இந்த தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

மனிதனும் சுவாசிக்கட்டும் என்பதே இந்த வருடத்தின் மையக்கருத்தாகும்.

அண்மைக்காலமாக ஆஸ்மா நோய் ஒரு உயிர்க்கொல்லி நோயாக உருவெடுத்திருக்கிறது.

உலக அளவில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சத்து 80 ஆயிரத்துக்கும் மேலானோர் இந்த நோயினால் இறக்கிறார்கள். இந்தியாவில் மட்டும் 2 கோடியே 50 இலட்சம் மக்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த 35 ஆண்டுகளில் இந்த நோயினால் பாதிக்கப்படுபவர்கள் இந்தியாவில் 7 மடங்காக கூடியிருக்கிறதென்று குறிப்பொன்று கூறுகிறது. (து)

### செய்திப்பரல்

★ ஊழல் குற்றச் சாட்டுக் காரணமாகத்தடுப்புக் காவலில் இருக்கும் இந்தோனேசிய முன்னாள் ஜனாதிபதி வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

★ ரஷ்யாவில் மத சுதந்திரத்திற்கு ஆபத்து வந்திருப்பதாக அமெரிக்க காங்கிரஸ் அறிக்கையொன்று கூறுகின்றது.

★ சிறையில் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து மதத்தலைவர்களையும் சீனா உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று சர்வதேச மத சுதந்திரம் குறித்த அமெரிக்க கமிஷன் கேட்டிருக்கிறது.

★ இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்ப வேண்டாம் என்று தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் மத்திய அரசைக் கேட்டுள்ளன.

★ கிரிக்கெட் ஊழல் சம்பந்தமான உண்மைகளைச் சொல்ல முன்வரும் வீரர்களுக்கு பொது மன்னிப்பு அளிப்பதாக இலண்டனில் கூடிய கிறிக்கெட் சபை அறிவித்துள்ளது. (து)

## இந்திய உஸ்பெக் வளர்ச்சிக்காய் 9 ஒப்பந்தங்களில் கைச்சாத்து

இந்தியாவும் உஸ்பெக்கிஸ்தானும் சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்த்து கூட்டாகப் போராட 9 ஒப்பந்நங்களில் கைச்சாத்திட்டுள்ளன.

கிரிமினல் விடயங்களில் பரஸ்பர சட்ட உதவி பெற்ற ஒப்பந்தம் மற்றும் குற்ற விசாரணைக்காகத் தாயகம் திருப்பி அனுப்பும் ஒப்பந்தம் இதில் அடங்கும்.

தகவல் தொடர்புத்துறை சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்றையும் இரு நாடுகளும் அங்கீகரித்துள்ளன.

இரு நாடுகளுக்கிடையேயான பொருளாதார உறவுகள் பற்றிக் கூட்டறிக்கையொன்றை இந்தியப்பிரதமர் வாஜ்பாய் அவர்களும் உஸ்பெக்கிஸ்தான் அதிபர் இஸ்லாம்கரிமோக்கும் ஒரு மணிநேரக் கலந்துரையாடலின் பின் கையெழுத்திட்டனர்.

உஸ்பெக் அதிபர் கரிமோக் அதிபர் நாராயணனையும் வெளியுறவு அமைச்சரையும் சந்தித்துப் பேசினர் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## நவாஸ்ஷெரீப்பின் வழக்கு விசாரணை முடியும்வரை சொத்துகள் பறிக்க தடை உத்தரவு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதம மந்திரிநவாஸ்ஷெரீப் விமானக்கடத்தல் மற்றும் குற்றங்களுக்காக வழங்கப்பட்ட தீர்ப்பை வழங்கியது.

எதிர்த்து தாக்கல் செய்த மேல் முறையீட்டின் மீது தீர்ப்புக் கூறும்வரை அவர் மீது விதிக்கப்பட்டிருக்கும் 10 ஆயிரம் டொலர் அபராதத்தையும் சொத்துக்கள் பறிமுதலையும் நிறுத்திவைக்கும்படி நீதிமன்றத்தின் இரண்டு உறுப்பினர் பிரிவு உத்தரவு இட்டிருக்கிறது.

இந்த மேல்முறையீட்டு மனு இம்மாதம் 9 ஆம் திகதி விசாரணைக்கு வரும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நவாஸ்ஷெரீப்புக்கு மரண தண்டனை வழங்கவேண்டும் என்று அரச தரப்புவழக்கறிஞர்கள் வாதாடுவார்கள் என்றுகூறப் படுகிறது. (து)

## அமைச்சர் கால்ராஜ் பதவியேற்பு

உத்தரப் பிரதேசில் பொதுப் பணித் துறை அமைச்சு கால்ராஜ்மிசாவிற்கு எதிரான லஞ்ச ஊழல்குற்றச்சாட்டுகள் தொடர்பாகஅவர்பதவிவிலகியதும்அதுதொடர்பாக நடைபெற்ற ஆறு நாள் சர்ச்சை முடிவுக்கு வந்தது.

பி. ஜே. பியின் மூத்த அமைச்சரான கால்ராஜ்க்கு எதிராக லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லையென்று சபாநாயகர் கேசிம்பாக்கிருபாட்டி கூறிவிட்டார்.

அவரது பதவி விலகலுக்குக் காரணமான கடிதத்தின் குறிப்புக்களில் மஸ்ராவுக்கு எதிரான தனிப்பட்டகுற்றச்சாட்டுகள் எதுவும் இல்லையென்றும் சபா நாயகர் கூறிவிட்டார், என்று செய்திகள் கூறுகின்றன. இவர் மீண்டும் பதவி ஏற்றமை குறிப்பிடத்தக்கது. (து)

அறிவுக்கு அதிர்ஷ்டம்
தொடர்ந்து
வலம்புரியில்
உலக தரிசனத்தைப்
பாருங்கள், சேருங்கள்!

# ஆனையிறவுசமர் வேளை அனுருத்த நுவரெலியாவில் தங்கியிருந்தாராம்

## கொழும்பு நாளிதழ் கூறுகின்றது

(கொழும்பு)

ஆனையிறவில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையே கடுஞ் சமர் நடந்து கொண்டிருந்த போது பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை குடும்பத்தோடு நுவரெலியாவில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்தார் என்று தகவல் வெளியாகியுள்ளதாகக் கொழும்பு நாளிதழ் ஒன்று தனது கடந்த திங்கட்கிழமைப் பதிப்பில் தெரிவித்துள்ளது.

''இதுபற்றி இவரிடம் சில சகாக்கள் கேள்வி எழுப்பியதாகவும் யார் சொன்னது? ஆனையிறவில்படையினர்பின் வாங்குவதாகக் கேள்விப்பட்டதும் எனது விடுமுறையைச் சுருக்கிக் கொண்டு நான் கொழும்புக்கு வந்துவிட்டேன். கொழும்பில் இருந்தவாறு அங்கு நடப்பவற்றை மொனிட்டர் பண்ணினேன். இதைவிட நான் வேறு என்ன செய்ய முடியும்? என்று அவர் பிடிகொடாமல் பதிலளித்திருக்கிறார் என்றும் இந்த நாளிதழ் கூறுகிறது.

**நாடுகளிடம் கோரிக்கை**

இதேவேளை ஏழு நாடுகளிடமிருந்து இலங்கை இராணுவத் தளபாட உதவியை அவசர அவசரமாகக் கோரியுள்ளதாகவும் ரஷ்யா, பிரிட்டன், பாகிஸ்தான், ஈரான், செக்குடியரசு, இஸ்ரேல், சிங்கப்பூர் ஆகியவையே இந்த நாடுகள் என்றும் இவ்விதழ் கூறியுள்ளது.

இந்தியாவிடமிருந்து இராணுவத்தினருக்கு சீருடை கோரப்பட்டுள்ளதாம் இராணுவத்தில் அவர்களது சீருடைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறதாம், காலுறையும் இந்தியாவிடமிருந்து பெற ஆடர் கொடுக்கப்பட்டுள்ளது விமானம் மூலம் இவற்றை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. என்றும் மேலும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## வவுனியாவில் தங்குவோருக்கு 16 வகை அனுமதிப் பத்திரங்கள்

[வவுனியா]

வவுனியாவில் தங்கியிருப்போருக்கு வவுனியாப்பொலிஸார் 16 வகையான அனுமதிப் பத்திரங்களை வழங்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவற்றில் ஒருநாள் அனுமதிப்பத்திரம், கடதாசி அனுமதிப்பத்திரம். ஒருமாத அனுமதி அட்டைப்பத்திரம், மூன்றுமாத அனுமதிஅட்டைப்பத்திரம் என்பனவும் இவற்றில் அடங்குகின்றன.

அனுமதிப் பத்திரம் வழங்கவென வழமையாக 20 இடங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் இப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (சி)

## மாரீசன்கூடல் றோ. க. த.க. பாடசாலை வி. போட்டி வியாழனன்று நிகழும்

[யாழ்ப்பாணம்]

மாரீசன் கூடல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வியாழக்கிழமை இடம் பெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பாடசாலை அதிபர் திரு. சூ. நேபேட் உதயகுமார் தலைமை தாங்குகிறார்.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் கே. தனபாலசிங்கம் கலந்து கொள்கிறார்.

இளவாலைமறைக்கோட்ட முதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் கௌரவ விருந்தினராக இளவாலை பங்குத்தந்தை அருட்திரு சி. ஜே. அன்ரனிபாலாவும் கலந்து கொள்வார்.

இவ் விளையாட்டு நிகழ்வு பாடசாலை மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (சி-12)

## விபத்தில் காயம் சாரதி மீது தாக்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு முன்பாக லான்மாஸ்டர் தட்டிவான் மோதலில் ஒருவர் காயம் அடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைதடி மேற்கைச் சேர்ந்த மாதன் சின்னத்துரை [வயது 45] என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

தட்டிவான் சாரதி இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-07)

## விரைவில் நிவாரணம்

(அச்சுவேலி)

வலி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட மக்களிற்கு 86 ஏ பிபுள்ளிகளிற்கான உலர் உணவு வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்குரிய பெயர்ப்பட்டியல் விபரம் கிராம சேவகர்களிடம் பறப்பட்டிருப்பதாகவும் பெரும்பாலும் இவ்வார இறுதிப்பகுதியில் நிவாரணம் வழங்கப்படும் என்றும் கோப்பாய் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க-14)

## பாதாள உலகக் கும்பலின் குற்றச் செயல் அதிகரிப்பு மக்களிடையே பயப்பீதி

(கொழும்பு)

கொழும்புவாழ் மக்களிடையே பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்கள் பற்றிய பயப்பீதி அதிகரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

சட்டவிரோத ஆயுதக் குழுவினரான பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்களது அண்மைக்கால ஆயுத அடாவடிநடவடிக்கைகள் அதிகரித்திருப்பதை யடுத்தே மக்கள் பெரிதும் பய உணர்வு கொண்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த குடும்பத்தினர் மீது மேற்படி கும்பலைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் கணவன் மனைவி ஆகிய இருவரும் கொல்லப்பட்டமையை அடுத்து இவர்கள் பற்றிய பயம் மக்களிடையே இன்னும் அதிகரித்துள்ளது.

இதேவேளை, அண்மையில் பாதாள உலகக் கும்பல்களால் மேற்கொள்ளப்பட்டதான குற்றச்செயல்களை விசாரிக்கவென அரசு தனியான பொலிஸ் குழுவினை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## ஆயுதங்களை கைவிட்டாலே பேச்சு ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்தல்

### அரசியல் நோக்கர் ஊகம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்புவார்களேயானால் அரசு அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் என்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க நாடு திரும்பியதும் ரூபவாஹினி மூலம்நாட்டுமக்களுக்கு கடந்த வெள்ளியன்று ஆற்றிய உரையில் கூறியிருப்பது பற்றி அரசியல் நோக்கர்கள் பல்வேறு ஊகங்களை எழுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கோரிக்கையை ஜனாதிபதி முன்னரும் விடுத்திருந்தார்பின்னர்நோர்வே அரசின் மத்தியஸ்த முயற்சியையடுத்து அதன் சுருதி குறைந்ததாகக் காணப்பட்டது எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இக்கோரிக்கையை ஏற்பர் என்பது நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாகவே அவர்களால் கூறப்படும் என்றும் சொல்லப்படுகிறது. (சி)

## கலாபூஷண விருதுக்கு நாற்பது தமிழர்களும் தெரிவாகியுள்ளனர்

### இம்மாதம் 22இல் வைபவம்

(கொழும்பு)

பல்வேறு துறைகளிலும் சேவையாற்றிய 14 பேருக்கு இம்முறை கலாபூஷண விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ்விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 22ஆம்திகதி மாலை கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில்நடைபெறும்.

இவ்விருது வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் 85பேர் சிங்களவர்களும், 40தமிழர்களும், 15 முஸ்லிம்களும் உள்ளனர்.

இவர்களை அந்தந்த சமய கலாச்சார பண்பாட்டலுவல்கள் திணைக்களங்கள் தெரிவு செய்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### கஞ்சாச்சேனை முற்றுகை

## மலையேறி, பொலிசார் மீதுகற் பாறைகளை உருட்டியநபர்

(பதுளை)

பெரும் கஞ்சாச் சேனை ஒன்றை நடத்தி வந்த நபர் ஒருவர் பொலிஸாரிடமிருந்து தப்பியோடி மலை மீதேறி பொலிஸாரை நோக்கிக் கற்பாறையை உருட்டிவிட்டாராம். இதில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டார்.

பதுளைப்பகுதியில் இச்சம்பவம் தொடர்பாக எ.எம். சந்திரதாசா என்ற இச்சந்தேகநபர் வலைவீசித்தேடப்பட்டு வருகிறார். பாறைகளை உருட்டி விபரீதம் உண்டுபண்ணிய இவர் தலைமறைவாகி விட்டதாகத் தெரிவிக்கப்பகிறது. (சி)

## சாவகச்சேரி மருத்துவமனைக்கு ரூ. 5 ஆயிரம் மருந்துப்பொருட்கள்

### பரோபகாரியின் உதவி

(தென்மராட்சி)

சாவகச்சேரி அரசினர்வைத்தியசாலை மற்றும் கொடிகாமம் வைத்தியசாலை என்பனவற்றில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

மாவட்டத்துக்கான மத்திய மருந்தகத்தில் மருந்துகள் வந்து சேராததே இதற்குக் காரணமெனத் தெரியவருகிறது.

அதேசமயம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சாவகச்சேரியிலுள்ள பரோபகாரி ஒருவர் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்துப் பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

சாவகச்சேரி வைத்தியசாலைக்குத் தற்போது வெளிநோயாளர்களின் வருகை அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (சி-77)

### யுத்த சூழ்நிலையால் இடம்பெயர்ந்து

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளோருக்கு விரைவில் நிவாரணம்

(அச்சுவேலி)

பளை, மருதங்கேணி, சாவகச்சேரி ஆகிய பிரிவுகளிலிருந்து யுத்த நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் வசித்து வருவோரை தாமதமின்றி பிரதேச செயலக அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இடம் பெயர்ந்து இது வரை பதிவு செய்யாது உறவினர் மற்றும் நண்பர் வீடுகளிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளோரை உடனடியாக பிரதேச செயலர் பணிமனையில் பதிவு செய்யுமாறு பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளையில் இடம் பெயர்ந்து மேற்படி பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு நிவாரணப் பதிவு அட்டைகள் விநியோகிக்கப்பட்டுவருவதாகவும் அவ்வப்பகுதி கிராம சேவகர்களுடன் தொடர்பு கொண்டு தமக்குரிய நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-14)

## இடம்பெயர்வு தொடர்கிறது; வர்த்தகமும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

(வரணி)

மிருசுவில், கொடிகாமம் கச்சாய் போன்ற பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்புக் கருதி வரணி மீசாலை சாவகச்சேரி போன்ற பகுதிகளுக்கு தமது உடைமைகளை வாகனங்கள் மூலம் ஏற்றிக் கொண்டு செல்கின்றனர்.

கொடிகாமம் வணிகர்களும்தம் கடைப்பொருட்களை ஏற்றுவதில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியில் நேற்றுப் பிற்பகலுக்குப் பின் மக்கள் நடமாட்டமின்றி பதற்ற நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (சி-28)

## இடம் பெயர்ந்த மக்களுக்கு தொண்டர் நிறுவனங்கள் உதவி

(அச்சுவேலி)

தற்போது நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும், எறிகணைத் தாக்குதல் அச்சம் காரணமாகவும் உசன். மிருசுவில், கொடிகாமம், எழுதுமட்டுவாள் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து செல்வது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு இடம் பெயர்ந்து செல்லும் மக்கள் வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளில் உள்ள தமது உறவினர் மற்றும் நண்பர்கள் வீட்டிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

பொது இடத்தில் தங்கியுள்ள மக்களுக்கு தொண்டர் நிறுவனங்கள் தம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்கி வருவதனையும் காணக்கூடியதாக உள்ளது. (சி-14)

## முன்பள்ளிகள் செயலிழந்தன

[தென்மராட்சி]

யுத்த நெருக்கடிகள் காரணமாக இடம்பெயர்வுகளை எதிர்நோக்கிய பச்சிலைப்பள்ளி, எழுதுமட்டுவாள், உசன், மிருசுவில், கிளாலி, மறவன்புலவு, தனங்கிளப்பு, கைதடி, நாவற்குழி போன்ற இடங்களில் நடத்தப்பட்டு வந்த 25க்கும் மேற்பட்ட முன்பள்ளிகள் செயற்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இந்த முன்பள்ளிகளில் கல்வி போதித்துவந்த 30க்குமேற்பட்ட ஆசிரியர்களும் மாணவர்களும்இடம்பெயர்ந்துள்ள பல்வேறு இடங்களிலும் இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி-77)

# யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு 250 லட்சம் ரூபா நிதிஒதுக்கீடு

(கொழும்பு)

யாழ். மாவட்ட வட மாகாணபுனர் வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை அபிவிருத்திக்கென இருநூற்று ஐம்பது இலட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

இதற்கான அனுமதி யாழ். அரச அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நூற்று ஐம்பது இலட்சமே ஒதுக்கப்படுவதாக இருந்ததிலும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி பி யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான வி. கே. ஜெகன் ஆகியோர் எடுத்த தீவிர முயற்சியினாலேயே 250 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நிதி மூலம் 75 வீதிகள் பாடசாலைகள், கோயில்கள் போன்றன மீள்புனரமைக்கப்படவுள்ளாதகவும் தெரியவருகின்றது.

(க-சி)

## இரு பிள்ளைகளின் தாய் படுகாயம் குக்கர் வெடித்ததன் கோர விளைவு

(யாழ்ப்பாணம்)

குக்கர் வெடித்துச் சிதறி பெண்மணி ஒருவர் கடுங்காயங்களுக்குள்ளாகி யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

2 பிள்ளைகளின் தாயான சிறிதரன் ஜெயகௌரி (வயது 32) என்பவரே எரிந்து கொண்டிருந்த மண்ணெய்க் குக்கருக்குஎண்ணெய் ஊற்ற முற்பட்ட சமயம் எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் இச்சம்பவம் கோண்டாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான விபத்துகள் அண்மைக் காலங்களாக யாழ். குடாநாட்டுப் பகுதிகளில் அதிகரித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

[சி-12]

## லங்கா முடித கப்பல் சேவை மேலும் இரு தடவைகள் ?

(திருகோணமலை)

திருகோணமலையில் தங்கியுள்ள வடபகுதிப் பயணிகளின் நலனுக்காக லங்கா முடித கப்பல் மேலும் இரு சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

லங்காமுடித கப்பல் இம்மாதம் 7 ஆம் திகதி அல்லது 8 ஆம் திகதி திருகோணமலையிலிருந்து புறப்படும் என நம்பகமாக அறியவருகிறது.

பெருமளவு வடபகுதிப் பயணிகள் காங்கேசன்துறைக்குச் செல்வதற்காக திருகோணமலையில் காத்திருப்பதுதெரிந்ததே.

(சி)

## உரும்பிராய் கிழக்கில் திடீர் முற்றுகை மூலம் கசிப்பு அழிப்பு

(ஆவரங்கால்)

உரும்பிராய் கிழக்கு புனித மிக்கேல் சனசமூக நிலையத்தினரால் மேற்படி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 200 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

கொள்கலன்களில் போடப்பட்டு புதைக்கப்பட்டிருந்த பெருந்தொகை கோடாவும் கைப்பற்றப்பட்டது உபகரணங்களும் மீட்கப்பட்டன. பின் இவையாவும் அழிக்கப்பட்டன.

தமது இந்நடவடிக்கை தொடரும் என்று மேற்படி சனசமூக நிலையத் தலைவர் என். இராசநாயகம் தெரிவித்தார்.

(சி-57)

## வலி - கிழக்கில் 3-ஆம் 4-ஆம் கட்ட நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள்

(அச்சுவேலி)

வலி;கிழக்கு, பிரதேசசெயலர் பிரிவில் வசித்துவரும் குடியிருப்பு சேதமுற்றவர்களுக்கு 'ஜன உதான' வீட்டுத் திட்டத்தின் கீழ் 2 ஆம், 3 ஆம் கட்ட நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய ஜே/ 276 கிராம சேவகர் பிரிவில் 25 பேரும், ஜே/ 258 கிராம சேவகர் பிரிவில் 24 பேரும். ஜே/ 262 கிராம சேவகர் பிரிவில் ஒருவரும் இக் கொடுப்பனவுகள் வழங்குவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமதுபகுதி கிராம சேவகர்களுடன் தொடர்பு கொண்டு பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(சி-14)

## அதிபர் தர பதவி உயர்விற்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்த உதவிய சகலரிற்கும் நன்றி

### அதிபர்கள் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அதிபர்களின் பதவி உயர்விற்கானநேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்தி முடிப்பதற்கு உதவியாக இருந்த சகல தரப்பினருக்கும் வடமாகாண அதிபர்கள் தமது நன்றிகளை தெரிவிப்பதாக வண்ணார் பண்ணை இந்துவித்தியாலய அதிபர் மு. செல்லையா தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான கே. வி. குகேந்திரன் (ஜெகன்), தவராசா ஆகியோருக்கும், அவ்அமைப்பைச் சேர்ந்த பிரேம் ஆகியோருக்கும் நன்றி தெரிவிக்க வேண்டிய கடப்பாடு வடமாகாண அதிபர்கள் சங்கத்திற்கு உண்டு.

மேலும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தில்லை நடராசர், மற்றும் வெகுஜன தொடர்பு ஊடகங்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக தெரிவித்துள்ளார்.

(க)

## சிறுவர் கழகங்கள்

(கல்வியங்காடு)

அறவழிச் செயற்குழு கைதடி, மட்டுவில், நாவற்குழி, நுணாவில் பகுதிக்கிராமங்களில் சிறுவர்கழகங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

6வயதிற்கும் 15வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்கள் இதில் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் மேலதிக விபரங்களைத் தலைமையலுவலகத்தில் பெறலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

## மண்ணெண்ணெய் விநியோகம்

(சங்கானை)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளிலும் பங்கீட்டு அட்டைக்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது. பண்டத்தரிப்பு பிரான்பற்று, விளான் போன்ற இடங்களில் மக்கள் வரிசையில் நின்று மண்ணெண்ணெய் பெற்றதைக் காணமுடிந்தது.

(க-16)

## ஈஸ்வரம்மா தின விழா

(யாழ்ப்பாணம்)

ஈஸ்வரம்மா தின விழா யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலைய மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

பஜனை, படக்காட்சி, கலை நிகழ்ச்சிகள், பரிசில் வழங்க முதலான நிகழ்ச்சிகள் இதில் இடம்பெற்றுள்ளன. (சி)

## நாய்களுக்குத் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடும் பணியில்,

இன்று வியாழக் கிழமை காலை 8.30 மணிதொடக்கம் 12.00மணிவரை கொழும்புத்துறைமேற்கு சுவாமியார் வீதி மகப்பேற்று நிலையத்திலும்,

பி.ப.2.00மணிதொடக்கம் 4.30 மணிவரை வேம்படி ஓ.எல்.ஆர்.சேர்ச் அருகாமையிலும்,

நாளை வெள்ளிக்கிழமை காலை8.30 மணிவரை தொடக்கம்12.30மணிவரை கொழுபுத்துறை சனசமூக நிலையத்திலும்.

பி.ப. 2.00 மணி தொடக்கம் 4.30 மணிவரை கண்டி வீதி அரியாலை மகப்பேற்று நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும். (செ)

## வாகனப் பத்திரங்கள்; படையினர் சோதனை நடவடிக்கை

(தென்மராட்சி)

வீதிகளில் செலுத்தப்படும் வாகனங்களுக்கான காப்புறுதிச் சீட்டு, வாகனவரிச் சீட்டு மற்றும் வாகனப் பதிவுகள் பற்றி பாதுகாப்புப் படையினர் வீதிகளில் தற்போது சோதனைகள் செய்து வருகின்றனர்.

மேற்குறித்த ஆவணங்களைத் தம்முடன் எடுத்துச் செல்லத் தவறிய வாகனச் சொந்தக்காரர்கள் பலர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படுவதாகவும் அறியப்படுகின்றது.

அதே சமயம் நடப்பு வருடத்துக்கான வாகனக் காப்புறுதிப் பத்திரம் வாகனவரிப் பத்திரம் போன்றவற்றினைப் பெறுவதற்காக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் பிரதேச செயலர் அலுவலகங்களில் வாகனச் சொந்தக்காரர்கள் பெருமளவில் கூடுவதையும் காணக் கூடியதாகவுள்ளது.

(சி-77)

## கோப்பாயில் நிறுவப்பட்ட தேசிய கல்வியியல் கல்லூரிக்கு தளபாடங்கள் வழங்க நடவடிக்கை

(நெடுந்தீவு)

கோப்பாயில் புதிதாக அமைக்கப்பட்ட தேசிய கல்வியியல் கல்லூரிக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களை வழங்க கூட்டுறவுத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

பல. நோ. கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பனை, தென்னை வள சங்கங்கள் ஆகியன இணைந்து இந்நிதியினை சேகரிக்க முடிவு செய்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(க-82)

## கல்நெஞ்சரால் கல்முனை வாசிக்கு ஏற்பட்ட துயர அனுபவம்

(கொழும்பு)

சவூதியிலிருந்து கடந்த வெள்ளியன்று கட்டுநாயக்கா விமான நிலையம் வந்து சேர்ந்த கல்முனை வாசி ஒருவர் வாடகை வாகனக்காரன் ஒருவனிடம் 1 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாவையும் மற்றும் பொருட்களையும் இழந்த சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது.

விமான நிலையத்திலிருந்து மருதானை செல்ல ஆயிரம் ரூபா வாடகை பேசி வந்த போது சாரதி வாகனத்தைப் பாழடைந்த வீடொன்றுக்குச் செலுத்தி கல்முனை வாசியைக் கட்டி வைத்து அடித்து விட்டு தனது சகாக்களுடன் சேர்ந்து பணம் பொருட்களைக் கொள்ளையடித்ததாகப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

(சி)

## குளவி கொட்டியதால் பனை மரத்திலிருந்து கீழேவிழுந்தவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதி

பனைமரத்தில் ஏறியவர் குளவி கொட்டியதால் கீழேவிழுந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்செழு பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னத்துரை சசிகுமார் (வயது- 20) என்பவரே காயமடைந்தவராவார்.

[க-12]

## யாழ்ப்பாணத்திலிருந்து நோயாளராக கொழும்பு வந்த இருவர் தலைமறைவாகின

(கொழும்பு)

யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்கென செஞ்சிலுவைச்சங்கத்தினரால்கொழும்புக்கு அழைத்துவரப்பட்ட நோயாளர்களில் இருவர் தலைமறைவாகிவிட்டனர் என அறிவிக்கப்படுகிறது.

இந்த நோயாளர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்து கடந்த சனிக்கிழமை மாலை தலைமறைவாகிவிட்டதாக கொழும்புப் பிரதேச [illegible] பொலிஸ்மா [illegible] திபர்பேதி லியனகே தெரிவி[illegible]ளார்.

இவர்கள் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களா என்பது குறித்து விசாரணையின் பின்னரே தீர்மானிக்கலாம் என்றும் அவர் சொன்னார்.

இவர்களுக்கு உதவியாக வந்த உறவினரைவிசாரணை செய்வதற்கான நடவடிக்கையும் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[சி]

## 'இனிமேல் ஏதாவதொரு நாடு முன்வருமா என்பது ஐயமே

### ஆசிய ராஜதந்திரி கருதுகிறாராம்

(கொழும்பு)

1987 முதல் 1990 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இந்தியப்படைகள் இலங்கையில் மேற்கொண்ட நடவடிக்கையில் ஈடுபட இனிமேல் ஏதாவதொரு நாடு முன்வருமா என்பது ஐயமே என்றும் இலங்கை பிரச்சினையில் தலையிட எந்த நாடும்முன்வராது எனத் தான் கருதுவதாகவும் ஆசியநாட்டு ராஜதந்திரி ஒருவர் கூறியுள்ளார் என்று கொழும்புத்தினசரி ஒன்று கடந்த திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.

இலங்கைக்குத் தனது துருப்புகளை அனுப்பி இந்தியா தனது கைவிரல்களைச் சுட்டுக் கொண்டதால் இதேதவறை அது மீண்டும் செய்யாதென அந்த ராஜதந்திரி கூறியதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

ஒரின் உழா அர்
உழவர் பயலென்னுப்
வாரி வளங்குன்றிக் கால்
- குறள்

# வலம்புரி

## மீண்டும் மீண்டும்

யுத்த மேகம் சூழ்ந்துள்ள வேளை. சுருதி மறந்து மனிதகுலம் ஸ்தம்பித்து நிற்கும் வேளை. மக்கள் ஏக்க உணர்வுடன் ஏதிலி வாழ்வை ஆரம்பிக்கும் வேளை. பதுக்கல் முதலைகள் தமது அதர்மப் பாதையில் அதிவேகமாக ஓட்டம் தொடங்கிய வேளை. இத்தனைக்கும் மத்தியில் சிந்தித்துச் சிந்தித்து சிந்தையழிந்த எம் மக்களின் பரிதாப நிலை.

தொடுவானம் போல் எங்கள் துயரங்கள் தொடரவேண்டுமா? இடையிடையே மிட்டாய் காட்டிக் குழந்தையின் அழுகையைநிற்பாட்ட முனைவது போல பேச்சுவார்த்தை என்ற குரல் கேட்கும். பின் கருச்சிதைவது போல் மறைந்துவிடும். இவை யார் செய்த பாவமோ? இந்த மண்ணிலே தமிழன் நிம்மதிப் பெரு மூச்சு விடுவது எப்போ?

வருடத்தில் ஒரு முறை வருகின்ற பாட்டாளிகளின் - உழைக்கும் வர்க்கத்தின் மேதினத்தில் ஒன்றுபட்டு உரிமைக்குரல் எழுப்பினாலென்ன என்று எண்ணத்தோன்றுகிறது. கோளமயப் பேசும் காலம் இன்று. ஆனால் தமிழன் யாதும் ஊரே என்று என்றோ சொல்லிவிட்டான். இன, மத, மொழி, பேதம் அறவேண்டுமென்று அறைகூவும் வேளையில் எம்மிடை உள்ள குழு பேதங்கள் அறவில்லையே என்று யாராவது சிந்தித்தார்களா? குழு பேதப் என்றோ ஸ்தமித்திருந்தால் அனுராதபுரம்வரை சென்றிருக்கலாமல்லவா?

சித்தாந்தம் பேசும் நேரம் இதுவல்ல. சிந்தனையில் மாற்றமே எமக்கு வேண்டும். நல்லதை சிந்தைக்கு எடுக்கின்ற பேராண்மையும் வேண்டும். வாழ்வியலிலே காலம் ஒன்றை எவராலும் வாங்க முடியாது. அதனாற் போலும் காலம் பொன்னானது என்றனர். பிறவித் தோற்றத்தின் பயன்பாட்டை அழிக்கக் கூடாது. அடைய வேண்டிய இன்பங்களைத் துய்த்தாகவேண்டும். அதுவும் உரியகாலங்களிலே. பல்லு விழுந்தபின் பலகாரம் உண்ண முடியாது.

மேலே கூறிய கருத்துக்களை உள்வாங்கிய நிலையில் இன்று வேண்டுவது ஒன்று அதுவே சமாதானம். சமாதான வாழ்வின் சுகத்தை நுகர தடங்கல்களாக இருக்கும் உள்ளங்கள் யாவும் மறுபிறப்பெடுக்க வேண்டும்.

- அன்புடன் ஆசிரியர்

### அரசியல் தீர்வே அவசியமென்பதை

# ஜெனரல் கொப்பேகடுவவும் கூறியிருந்தார் என்கிறார் மந்திரி

(கொழும்பு)

''உழைக்கும் மக்கள் யாவரும் வீதிகளில் இறங்கி அரசியல் தீர்வை விரைவில் பாராளுமன்றத்தில் அரசு சமர்ப்பிக்க அழுத்தம் கொடுக்க வேண்டும். தீர்வைத் தமிழ் மக்களுக்கு வழங்குவதன் மூலமே யாழ் நகரை முழுமையாகக் கைப்பற்றி புலிகளைத் தோல்வியடையச் செய்யலாம். யாழ். பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த அமரர் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ என்ற வீரர் கூட யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது, பேச்சுவார்த்தையின் மூலமுமே தீர்வு காண முடியும் என்று வலியுறுத்தியமையும் நினைவு கூர விரும்புகிறேன்''

இவ்வாறு விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப அமைச்சரும் லல்காசம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளருமான பட்டி வீரக்கோன் கூறியுள்ளார்.

''அரசியல் தீர்வு வழங்காதது தமிழர்களது தவறல்ல. எமது தவறுதான். அரசியல் தீர்வொன்றை அவர்களுக்கு இத்தனை காலமாக வழங்காதிருக்கிறோம். தீர்வு வழங்குவது புலிகளுக்கல்ல, தமிழ் மக்களுக்கே. இதனை இங்குள்ள அரசியல் கட்சிகள் உணருவதாக இல்லை. யுத்தத்தின் மூலம் வெற்றி காணலாமென எண்ணுகின்றன'' என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். (சி)

### இராணுவ ஆஸ்பத்திரி மருந்து கடத்தல்

# கைதான கேர்ணல் பற்றிய புலன்விசாரணையில் புதிய திருப்பம்

(கொழும்பு)

கொழும்பு இராணுவத்தலமயகத்திலுள்ள இராணுவ ஆஸ்பத்திரியிலிருந்து மருந்துப் பொருட்களைக் கடத்தியதாகக் கூறப்படும் கேர்ணல் எஸ். டி. சீ. சில்வா என்பவர் கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதனையடுத்து பல புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரவுவேளை இராணுவ ஆஸ்ப்பத்திரிக்கு வெளியே சுமார் 30 ஆயிரம் ரூபாபெறுமதிவாய்ந்த மருந்துப் பொருட்களுடன் இராணுவ, பொலிஸாரால் கைது செய்யப்பட்டநபர் ஒருவர் தெரிவித்த தகவலையடுத்து இந்த கேர்ணல் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் இராணுவ வைத்திய சேவைப்பணிப்பாளர் என்று நீண்டகாலமாக மருந்துப் பொருட்கள் மற்றும் படையினருக்குக் கிடைக்கும் பரிசுப் பொருட்களைக் கடத்திவந்துள்ளார் என்றும் இவருக்கு மருந்துச்சாலை ஒன்றும் ஆஸ்பத்திரி ஒன்றும் சொந்தமாக இருப்பதாகவும்பொலிஸ் விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

(சி)

## அலங்காரத் திருவிழா

(இணுவில்)

அளவெட்டி முருங்கைப் புலம் ஞானவைரவர் கோயில் அலங்காரத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

பண்ணிசை, சொற்பொழிவு, பட்டிமன்றம் என்பனவும் இடம் பெறவுள்ளன.

[சி-49]

## காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம்நாகநாதன் வீதியைச் சேர்ந்த நடேசன் அகிலன் (வயது 13) என்ற சிறுவன் கடந்த 29 ஆம்திகதி முதல் காணாமல் போய் விட்டதாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. (க-3)

## பண்ணிசைப் போட்டி

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோவில் திருநெறிய தமிழ் மறை, கழகத்தால் கோயில் மஹோற்சவத்தை ஒட்டி, நடாத்தப்படும் பண்ணிசைப் போட்டி, எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு இணுவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. [சி-49]

## சாயி அருளமுதம்

### படைத்தவர்



ரோஜா மலர் இருக்கிறது. அதை உருவாக்கியவர் ஒருவர்இருக்க வேண்டும். ஒவ்வொரு பொருளுக்கும் அதைஉருவாக்கியவரோ படைத்தவரே இருக்கவேண்டும். இயற்கையின்விதி என்றுஅதைக் கூறுவதுதவறு.

அன்னப்பறவை, தண்ணீர் கலந்தபாலில் இருந்து பாலைமட்டும் பிரித்து பருகுகிறது அதன் அலகைப் பாலினுள் செலுத்தியதும். அலகில் இரசாயனப் பொருள் இருப்பதால், அதன் விளைவாக, அலகின் அருகில் உள்ள பால் பிரிந்து விடுகிறது. அதன் பின் எளிதாக பாலை மட்டும் அன்னம் பருகுகின்றது—இவ்வாறு விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆனால், அதன் மூக்கருகில் இரசாயனப் பொருளை ஏற்படுத்தியது யார்? யாராவது ஒருவரை நாம் அச் செயலுக்கு ஏற்றுக்கொள்ள வேண்டுமே. அதற்கு ஒரு காரணம் வேண்டுமே. கடவுளின் படைப்பு [சிருஷ்டி] என்பதே இதன் காரணம். அனைத்து கண்டுபிடிப்புகளுக்கும் ஒரு சிருஷ்டிகர்த்தா [படைத்தவர்] உண்டு என்பதை மட்டும் மறவாதிர்கள்.

பாபா

### நூல் திறனாய்வு

# கல்வியியல் ஆய்வில் புதியகோணம் வெளிப்படுத்தும் சபா.ஜெயராசாவின் யாழ்ப்பாண மரபுவழிக்கல்வி

கல்வி இயல் அறிஞர் கலாநிதி சபா ஜெயராசா அவர்கள் எழுதியுள்ள நூல் 'யாழ்ப்பாணத்து மரபுவழிக் கல்வி' என்பது. இதில் ஆறு ஆய்வுக் கட்டுரைகள் அடங்கியுள்ளன.

மரபு வழிக் கல்வி என்று நூலாசிரியர் குறிப்பிடுவது, வேற்று நாட்டாரின் ஆட்சிக் காலகட்டங்களில் அவர்களின் செல்வாக்கினால் இங்கு கொண்டு வந்து புகுத்தப்பட்ட புதிய பள்ளிக் கல்விக்கு முன்னர், யாழ்ப்பாணத்து மக்களிடையே நிலவி வந்த அறிவூட்டற் செயற்பாடுகளே ஆகும்.

அச் செயற்பாடுகள், (1) திண்ணைப் பள்ளிக்கூடங்களின் மூலம், (2) நாட்டார் கலைகளின் மூலமும், (3) தொழில்வழிப் பயிற்சி மூலமும், (4) சடங்காசாரம் மூலமும், (5) சமயவழிபாட்டொழுங்கு மூலமும் நிகழலாயின, இச் செயற்பாடுகளை வகைப்படுத்தித் திரட்டி இன்றைய உலகின் சிந்தனை நோக்கினூடு இவற்றைப் பரிசீலித்து விவரணம் செய்கிறது, பேராசிரியர் அவர்களின் இந்தஆய்வுத்தொகுப்பு.

பழைய நாட்டார் பாடல்கள், பழமொழிகள், சொற்பிரயோகங்கள், பேச்சுவழக்கு விகற்பங்கள், தொன்மைக் கூறுகள் ஆகியவற்றைபே ஆசிரியர் தமக்கு ஆதாரமாகக் கொள்ளுகிறார். மக்களிடையே வழங்கிய குட்டிக் கதைகளும், பாடற்பகுதிகளும். தமிழரசர் காலத்தும் அதற்குப் பிந்திய காலங்களிலும் நம் மக்களிடையே நிலவிய கருத்தியல்களை மட்டுக்கட்டி அடையாளம் காண்பதற்குத் துணையாகக் கொள்ளப்படுகின்றன. அத்துடன், வைத்தியம், சோதிடம், மாந்திரிகம், கவின்கலைகள் சார்ந்த நடைமுறை வழக்குச் செய்திகளும், இந்த ஆய்வு முயற்சிக்கு அடிப்படையாய் அமைகின்றன.

இவ்வாறான ஆய்வின் போது, மரபுவழிப் பள்ளிக்கூடங்களிடையேகூட, திண்ணைப் பள்ளி குருகுலம், மரநிழற் பள்ளி, இரவுப் பள்ளி, கோயில்மடப் பள்ளி என்று நுண்மையான வேறுபாடுகள் சிலவற்றை நூலாசிரியர் இனங்கண்டு வகுத்துரைப்பது சிறப்பாயுள்ளது.

பேராசிரியர் ஜெயராசா அவர்கள், நவீன கல்வி இயலில் ஆழ்ந்த பயிற்சி உடையவர். அதனால், இக்காலத்து ஆய்வு நெறிகளைக் கையாண்டு, புதிய சொற்பதங்களினாலே நம் முன்னோரின் கல்வி இயல் அணுகுமுறைகளை விளக்குவதற்கு அவரால் முடிகிறது.

இது, நம் மரபுகளைச் சற்றே விலகி நின்று, புறவயமாக நோக்கி மதிப்பீடு செய்வதற்கு உதவியாய் அமைகிறது எனலாம்.

மேலும்- புதுப்புதுச் சொல்லாக்கங்களை இயற்றி வழக்கத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஆர்வவேகமும் பேராசிரியரிடம் உண்டு. சீர்மியம், வாண்மை, மீப்பெருக்கு, கூரிடர். வளமியம் என்றவாறு வரும் புதுப்புனைவுகள் வாசகர் சிலருக்குச் சிரமம் தரக்கூடும் இவற்றுட் பலவற்றுக்குச் சமமான ஆங்கிலச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவை படிப்போர் சிலருக்கு உதவியாய் அமைகின்றன. அதே வேளை, 'சோம்பல்' என்ற தமிழ்ச் சொல்லை, laziness என்ற ஆங்கிலச் சொல் கொண்டு விளக்குவது தேவையா என்பது போன்ற கேள்விகளும் எழுகின்றன.

தொகுத்து நோக்குகையில், யாழ்ப்பாணத்துக்கே உரிய கல்வி மரபின் ஆறு முகங்களைக் காட்டுவதில், பேராசிரியர் ஜெயராசா அவர்களின் முயற்சி கணிசமான வெற்றி கண்டுள்ளது என்பதில் ஐயமில்லை. இசை, நடனம், கூத்து, உளவியல் தொடர்பான அம்சங்கள் நுண்ணயத்துடன் கையாளப்பட்டுள்ளன. இது பாராட்டப்பட வேண்டியது. எஸ். பரமசாமி, க. கந்தசாமி, எஸ். நடராசா, பண்டிதர் க. கந்தசாமி முதலான அனுபவசாலிகளின் செவ்விகளும் மரபுக் கூறுகள் சிலவற்றின் பரிமாணங்களை வெளிக்கொணர உதவுகின்றன. இந்த விதமான கள ஆய்வுச் சேகரிப்புகள் இன்னும் பரந்த அளவிலே செய்யப்பட்டிருப்பின் இந்த நூலின் பெறுமானம் இன்னும் சில படி உயர்ந்திருக்கும்.

மொத்தத்தில், யாழ்ப்பாணத்தின் தனித்தன்மைகளை வெளிப்படுத்தும் இந்த முயற்சி, கல்வி இயல் ஆய்வில் ஒரு புதிய கோணத்தைப் புலப்படுத்தி நிற்கிறது.

கவிஞர் இ. முருகையன்

★ எரிபொருள் கூட்டுத்தாபன

# பங்கீட்டு அட்டை மூலம் பெற்றோல் வழங்க யாழ்.செயலகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்கி பெற்றோலுக்கான கறுப்புச்சந்தையை ஒழிக்கும் வகையில் எரிபொருள் விநியோகத்திற்கு புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். குடாநாட்டிற்கான எரிபொருள் விநியோகம் சம்மந்தமாக நேற்று யாழ். செயலக அரச அதிபர் க: சண்முகநாதன் தலைமையில் மகாநாடு ஒன்று நடைபெற்றது இம் மாநாட்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வடபிராந்திய முகாமையாளர், பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வாகனங்களின் எண்ணிக்கைக்கேற்ப எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

பங்கீட்டுஅட்டைக்கு மோட்டார் சைக்கிள் வைத்திருப்போருக்கு ஒரு வாரத்துக்கு 3 லீற்றர் பெற்றோலும், மோட்டார்காருக்கு ஒரு வாரத்துக்கு 10 லீற்றரும், ஓட்டோ, மற்றும் ஏனைய வாகனங்களுசகும் 3 லீற்றருமாக வழங்குவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பங்கீட்டு அட்டைகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இன்று சகல பிரதேச செயலககங்களுக்கு அனுப்பி வைக்கவுள்ளது.

இப்பங்கீட்டு அட்டையில் வாகனச் சொந்தக்காரரர்கள் தமது வாகனங்கள் பற்றிய முழு விபரங்களையும் பதிந்து அருகில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ-3)

## இராணுவ வைத்தியசாலைக்கு ஐ.தே.க. மருத்துவ உதவி

[கொழும்பு[

கொழும்பு இராணுவவைத்திய சாலைக்கு, ஐ.தே.கட்சியினரால் ஒரு தொகுதி மருத்துவஉபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம், ஐ.தேகட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பெயரில்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்அனுராபண்டார நாயக்காவினால் கேணல்சஞ்சீவ முனசிங்கவிடம் மருத்துவ உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன இதேவேளை கடந்தசிலதினங்களுக்கு முன்பு இந்தமருத்துவ உபகரணங்களை இராணுவ வைத்தியசாலை அதிகாரிகள் ஏற்கமறுத்தமை குறிப்பிடத் தக்கது. (4)

## இளைஞன் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த அன்ரன் ராஜ்குமார் (வயது 24) காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாக மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி என். ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார். [வ]

## மட்டக்களப்பில் இளைஞர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடியில் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரினால் மேற்கொள்ளப்பட்ட கிரனேட் வீச்சில் சிறீஸ்வரன் (வயது 18) என்பவர் கொல்லப்பட்டுள்ளார்.

இவரது தாய் உட்பட 4 பேர் காயமடைந்துள்ளனர். கல்லடி கடற்கரை வீதியிலுள்ள அவரது வீட்டில் வைத்தே இக்குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் இவர் தமிழ்க்கட்சி ஒன்றின் முன்னாள் உறுப்பினர் என்றும் தெரிவிக்கபபடுகிறது. (வ)

## இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டியைச் சேர்ந்த சிறிபத்மநாதன் சிவாதரன் (வயது 17)என்பவர் இராணுவத்தினரால் கைது செய்யப் பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை ஈ.பி..டி. பி.அலுவலகத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பிரஸ்தாபநபரை கடந்த 30ஆம் திகதி கைது செய்தது தொடர்பாக இராணுவத்தினரால் ரசீது வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பருத்தித்துறை ஈ.பி.டி.பி.யினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (வ-அ-52)

★ ★ ★

இணுவில் கிழக்கைச்சேர்ந்த ஆறுமுகம் ஜெயராசலிங்கம் (வயது33) நேற்று முன்தினம் (2/5) இராணுவத்தால்கைது செய்யப்பட்டுள்ளதாக இவரின் உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

## சோபை இழந்து காணப்படும் யாழ்.நகரம் மக்கள் மத்தியில் பீதி, அச்சம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில்தீவிரம் அடைந்து வரும் யுத்தத்தைத் தொடர்ந்து கடந்த சில நாட்களாக யாழ்.நகரம சோபை இழந்து காணப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி கொள்ளை லாபம் அடிக்கும் வர்த்தகர்களின் நடவடிக்கைகள் மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது. உள்நாட்டு வெளிநாட்டு தொலைத் தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் பணப் புழக்கம்வெகுவாகக்குறைந்து காணப்படுவதுடன் மக்கள் மத்தியில் பீதியும் அச்சமும் நிலவுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (வ)

## தென்மராட்சி மக்கள் துன்னாலை வல்லிபுரக்குறிச்சியில் தஞ்சம்.

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் யுத்தம் மூண்டுள்ள பகுதிகளில் இருந்து மக்கள் பெருமளவில் எடுக்கக்கூடிய மூட்டை முடிச்சுகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கரம்பைக்குறுச்சி, வரணி கறுக்காய் ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் இடம் பெயர்ந்து துன்னாலை, வல்லிபுரக்குறிச்சி ஆகிய பகுதிகளில் ஆள்கள் இல்லாத வீடுகளில் தஞ்சம் புகுவதாகவும் மற்றும் சிலர் தடிகள் மரங்கள் எடுத்து வந்து கொட்டில்கள் போட்டு இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புலிகளின்ஷெல் வீச்சு இருபடையினர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலநறுவ எல்லையில் வெலிகந்தவில் இராணுவப் பொலிஸ் நிலைகள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மோட்டார்த் தாக்குதலில் இருபடையினர் கொல்லப்பட்டனர்.

ஒரு சிப்பாயும் ஒரு பொதுமகனும்காயமடைந்து பொலநறுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-ச)

## செய்தியாளர் விசாரிக்கப்பட்டார்

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கச் செயலாளர் இரா. துரைரத்தினத்தை நாசகார தடுப்புப் பொலிஸ் பிரிவினர் விசாரணை செய்ததுடன் வாக்கு மூலமும் பெற்றுள்ளனர்.

கடந்த 21 ஆம் 22ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் பத்திரிகையாளர்களுக்கு நடத்தப்பட்ட கருத்தரங்கு தொடர்பாகவே இவர் விசாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-ச)

## சடலங்கள் அடையாளம் காணப்பட்டது

(கொழும்பு)

கடந்த சில தினங்களுக்கு முன்பு விடுதலைப் புலிகளால் ஐ.சி.ஆர்.சி. மூலம்! ஒப்படைக்கப் பட்டுள்ள 42 சடலங்களில் 13சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்ட இச்சடலங்கள் சுமார் 4 மணித்தியாலங்களுக்குப் பின்னரே அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் அடையாளம் காணப்படாத எஞ்சிய சடலங்கள் பல் வைத்தியரினால் அடையாளம் காணப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## இளம் பெண் கைது

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த தம்பிராசா சித்திராங்கனி [வயது26] என்பவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக நேற்று இரவு 7 மணியளவில் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (வ-ச)

### உணவுப்...

கையிருப்புத் தொடர்பாக புனர்வாழ்வுப் பகுதி அதிகாரி ஒருவர் தகவல் தெரிவிக்கையில் புனர்வாழ்வுப் பகுதியினர் யாழ். குருநகர் களஞ்சியத்திலும், நாவற்குழி களஞ்சியத்திலும் சுமார் 14ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியும் 14 ஆயிரம் மெற்றிக்தொன் சீனியும் கையிருப்பில் உள்ளதாகவும் காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் போதிய அளவு கோதுமை மாவு கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

### யுத்தம...

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது இப்பொழுது நடைபெறும் போருக்கு வருடாந்தம் ஏறத்தாள ஆறாயிரம்கோடிரூபாவுக்கு மேல் செலவாகிறது இது மொத்த தேசிய உற்பத்தியில் 5வீதமாகும் இதனால் முக்கியமான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-ச)

### பீரங்கி...

கேணல் பானு உயிரிழந்து விட்டதாக தனியார் ஒலிபரப்பு சேவை நிறுவனமான சூரியன் எவ்.எம் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்தது அதனை மேற்கோள் காட்டி வலம்புரியும் செய்தி வெளியிடப்பட்டிருந்தது ஆனால் அச்செய்தியில் எதுவிதமான உண்மையும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

### வாஜ்பாய்...

இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வாணி இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ்பெர்னாண்டஸ் வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் மற்றும் இந்திய முப்படைத் தளபதிகள் ஆகியோரும் உடனிருந்தனர்.

இவ்வாறு கதிர்காமரை உயர் அமைச்சர் மூவருடனும் முப்படைத் தளபதிகளுடனும் சேர்ந்து சந்தித்திருப்பது இலங்கை விடயத்தில் இந்தியா அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்பதைக் காட்டுவதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

### கிளாலி...

கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையே கடும் மோதல் இடம் பெறுவதாகவும் அப்பகுதியை தக்க வைப்பதற்கு படையினர் கடுமையாக போராடி வருவதாகவும் விடுதலைப்புலிகளும் அப்படைத்தளத்தைக் கைப்பற்றுவதற்கு கடுமையாக முயன்று வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இரு பகுதியும் கடுமையான ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் ஈடுபட்டுவருவதாகவும் தெரியவருகிறது. (வ-ச)

### வன்னி,..

தாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதேச ரீதியாக முள்ளியவளைப் பகுதியில் எல்லைப் படையினரின் அணி வகுப்புடன் அலங்கார ஊர்திகளும் பங்கு பற்றிய ஊர்வலமும், பொதுக் கூட்டமும் இடம்பெற்றதுடன் ஸ்கந்தபுரத்திலும் மேதின நிகழ்வுகள் இடம்பெற்றதாக அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன, (வ-ச)

### இலங்கையில்...

பிகாரி வாஜ்பாயை சந்தித்து பேச்சு நடத்திய பின்பே இக் கருத்து இந்திய வெளியுறவு அமைச்சர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டின் மீது விடுதலைப் புலிகள் தொடுத்துள்ள யுத்தத்தின் பின்னணி பல விளைவுகளை இராணுவத்தினர் எதிர் நோக்க வேண்டிய நிலையில் அதற்கு இந்தியா இராணுவ ரீதியிலான உதவி எதுவும் வழங்குவது இலங்கையில் இந்தியாவின் எவ்வித இராணுவத் தலையீடும் இருக்காது என வெளியுறவு அமைச்சர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடான இலங்கையின் ஒரு இலட்சம் அகதிகளுக்கு இந்தியா ஏற்கனவே புகலிடம் அளித்துள்ளது.

இலங்கையின் அனைத்து மக்களும் விரும்பும் அமைதி ஏற்பட இந்தியா உதவ என்றும் தயாராக உள்ளது என்று வெளியுறவு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### நோர்வே...

யாழ்ப்பாணத்தில் யுத்தம் தொடரப்பட்டு புலிகளின் தாக்குதல்களுக்கு பதில்த் தாக்குதல்கள் நடத்தப்படும்.

இந்தியப் படையினரை அழைக்க பலர் முனைகின்றனர் ஆனால் அதை நாம் எதிர்பார்க்கவில்லை. நோர்வே சமரச முயற்சிகளையும் தற்போது பலர் எதிர்க்கின்றனர். ஒரு காலத்தில் அதன் அவசியத்தையும் அவர்கள் உணர்ந்துகொள்வர் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நிலைமைகள் மோசமானால் தென்பகுதியில் பிரச்சினைகள் வராமல் இருக்க மாவட்ட கிராமிய குழுக்களை அமைக்கப்போவதாகவும் இன்னுமொரு 1983 ஆம் ஆண்டு வரவிடமாட்டேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-ச)

### 23 லொறிகளில்...

லொறிகளிலும் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதே வேளை முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து 27 நோயாளர்களும் ஐந்து உதவியாளர்களும் நேற்று முன்தினம்வவுனியாவந்து சேர்ந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

### ராஜீவ்...

டும் வராது என மறுமலர்ச்சி தி மு.க. பொதுச்செயலர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவத்தை வரவழைக்க பௌத்த பிக்குகள் கோருகின்றனர். ஆனால் அது ஒரு போதும் நடைபெறமாட்டாது. இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகள் எண்ணிலடங்காது. இதனால் காங்கிரஸ் செய்த தவறை வாஜ்பாய் செய்யமாட்டார் என்று. கோபாலசாமி மேலும் தெரிவித்தார் (ச-4)

### பிரிகேடியர்...

தளபதியே கடமையாற்றி வந்ததும் இங்கு குறிப்பிடத் தக்கது.

மன்னார்ப் படைத்தளங்களை தாக்கப்போவதாக தெரிவிக்கும் சுவரொட்டிகள் மன்னாரில் ஒட்டப்பட்டிருந்ததை அடுத்தே இந்நியமனம் இடம்பெற்றிருப்பதாக மன்னார் மக்கள் மத்தியில் பரவலான கருத்து நிலவுகிறது (வ-ச)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மேமாதம் 04-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.